ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஜூலை. 26, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 292 ❖ ரூ.10

### மழைக்கால கூட்டத்தொடர் 4வது நாளாக எதிர்க்கட்சிகள் போராட்டம்

# தாக்கு

## நாங்கள் மணிப்பூரை பற்றி விவாதிக்க விரும்புகிறோம். பிரதமர் மோடியோ கிழக்கிந்திய கம்பெனி பற்றி பேசுகிறார்; மல்லிகார்ஜுன கார்கே



**புதுடெல்லி, ஜூலை. 26–**

மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் பேச வலியுறுத்தியும், ஆம் ஆத்மி எம்.பி. சஞ்சய் சிங் இடைநீக்கத்தைக் கண்டித்தும் 26 எதிர்க்கட்சிகள் கொண்ட இந்தியா கூட்டணி விடிய விடிய போராட்டம் நடத்திய நிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் பாஜக நாடாளுமன்ற குழு கூட்டமும் நடைபெற்றது.

மழைக்கால கூட்டத்தொடரின் நான்கவது நாளான நேற்று செவ்வாய்க்கிழமை 11 மணிக்கு நாடாளுமன்ற கூடியது. இரண்டு அவைகளிலும் மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும். பிரதமர் நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் முழக்கங்கள் எழுப்பின. இதனால் மக்களவை மதியம் 2 மணிவரையிலும், மாநிலங்களவை மதியம் 12 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மாநிலங்களவை மதியம் 12 மணிக்கு மீண்டும் கூடியது. அப்போது மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவையில் பேசுகையில், "நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கிய இந்த நான்கு நாட்களில் பல பிரதிநிதிகள் விதி 267-ன் கீழ் விவாதம் நடத்த வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்துள்ளனர். இது முதல் முறை இல்லை. 2016-ம் ஆண்டு பாஜக ஆட்சியில் இருந்தபோது விவாதம் நடத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டது. காங்கிரஸ் ஆட்சியிலும் விவாதம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. இப்போது மணிப்பூர் பற்றி எரிகிறது. நாங்கள் அதுகுறித்து தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறோம். ஆனால், பிரதமர் கிழக்கிந்திய கம்பெனி பற்றி பேசுகிறார்" என்று கார்கே பேசினார். இதனைத் தொடர்ந்து, நிலவிய அமளியால் அவை மதியம் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, பிரதமர் மோடிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ட்விட்டரில் ராகுல் காந்தி இட்ட பதிவில், "நீங்கள் எங்களை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம் மிஸ்டர் மோடி. ஆனால், நாங்கள் இண்டியா தான். நாங்கள் மணிப்பூரின் காயங்கள் ஆற உதவுவோம். நாங்கள் மணிப்பூர் பெண்கள், குழந்தைகளின் கண்ணீரைத் துடைப்போம். நாங்கள் மணிப்பூரின் அனைத்து மக்களுக்கும் அன்பையும், சமாதானத்தையும் மீட்டுக் கொடுப்போம். இந்தியா என்பதன் கருத்தியலை நாங்கள் மணிப்பூரில் மீள்கட்டமைப்போம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, பாஜக எம்.பி.க்களின் வாராந்திர கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். அதில் அவர் பேசும்போது, "இதுநாள் வரையில் நான் இதுபோன்ற திக்கற்ற எதிர்க்கட்சியினரைப் பார்த்தது இல்லை. 'இண்டியா' என்ற பெயருக்காக அவர்கள் தங்களையே புகழ்ந்து கொள்கிறார்கள். கிழக்கிந்திய கம்பெனி, இந்தியன் முஜாகிதீன், பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா போன்றவற்றிலும் இந்தியா என்ற பெயர் இருக்கிறாது. அதனால், 'இண்டியா' என்ற பெயரால் ஒன்றும் ஆகிவிடாது. நாட்டின் பெயரை மட்டும் வைத்துக்கொண்டு மக்களை தவறாக வழிநடத்த முடியாது.

தோல்வி, சோர்வு, நம்பிக்கையின்மை போன்றவற்றால் மோடியை எதிர்ப்பது ஒற்றையே கொள்கையாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சிகளாக மட்டுமே இருக்க முடிவு செய்திருப்பதையே அவர்களின் நடத்தை காட்டுகிறது. வரும் 2024 மக்களவைத் தேர்தலில் மக்களின் ஆதரவுடன் பாஜக எளிதில் வெற்றி பெறும்" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

வரும் மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு எதிராக ஒன்றுபட்டு செயல்பட எதிர்க்கட்சிகளின் முன்னணியை உருவாக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகளின் இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் பெங்களூருவில் கடந்த மாதம் 17,18 ஆகிய தேதிகளில் நடந்தது. அதில் 26 எதிர்க்கட்சிகள் அடங்கிய கூட்டணிக்கு, இந்திய தேசிய உள்ளடங்கிய வளர்ச்சி கூட்டணி என பொருள்படும்படி 'இண்டியா' என்று பெயர் சூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.







## அறந்தாங்கியின் காவல் தெய்வம் வீரமாகாளியம்மன் தேரோட்ட திருவிழா

**அறந்தாங்கி , ஜூலை. 26–**

அறந்தாங்கி அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில் ஆடிப்பெருந் திருவிழாவை முன்னிட்டு இன்று தேரோட்ட திருவிழா நடைபெறுகிறது.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் பிரசித்தி பெற்ற வீரமாகாளியம்மன் திருக்கோயில் உள்ளது.

இக்கோயிலில் ஆண்டுதோறும் ஆடிப்பெருந்திருவிழா நடைபெறும். கடந்த ஐந்து ஆண்டுகளாக கோவில் புணரமைப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்நிலையில் நடப்பாண்டு ஆடிப்பெருந்திருவிழா கடந்த 18-ஆம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. 30 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் ஒவ்வொரு நாளும் தினசரி காலை மற்றும் மாலை வீரமாகாளியம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்யப்பட்டு அம்மன்வீதி உலா நடைபெற்று வருகிறது.

திருவிழாவின் ஒன்பதாம் நாளான இன்று மற்றும் நாளை ஆடி திருத்தோரோட்டும் மற்றும் ஆகஸ்ட் 15-ந் தேதி தெப்பத்திருவிழாவும் நடைபெறுகிறது. தமிழகத்திலேயே இரண்டு நாட்கள் தேர் திருவிழாவும் 30 நாட்கள் மண்டகப்படி திருவிழாவும் நடைபெறும் பிரசித்தி பெற்றகோயில் இதுவாகும்.

இன்று மற்றும் நாளை நடைபெறும் தேரோட்டத் திருவிழாவில் அறந்தாங்கி சுற்றுவட்டார பொதுமக்கள் ஐம்பதாயிரம் பேர் கலந்து கொள்ளும் நிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

அன்பை உணர மட்டுமே முடியும்.
ஒருபோதும் பார்க்க முடியாது.
அதேபோல் தான் எதையும்
நிரூபிக்க முயற்சி
செய்யாதீர்கள்!






# புதுக்கோட்டையில் புறா பந்தயம் 24 மணி நேரம் பறந்து சாதனை



புதுக்கோட்டை, ஜூலை.26–

புதுக்கோட்டை மாவட்ட மாமன்னர் ரேசிங் பீஜியன் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் சிவக்குமார் தலைமையில் ஜூலை மாதம் 14ம் தேதி முதல் 16ம் தேதி வரையில் மூன்று நாட்கள் புறா பந்தயம் நடைப்பெற்றது.

மூன்று சாதா புறா பந்தயத்தில் ஜாக்பாட் வெற்றியாளராக சங்கத்தின் பொருளாளர் பழனிசாமிக்கு சங்க நிர்வாகிகள் சிங்கமுத்து அய்யனார் திடலில் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து பரிசுகளை வழங்கினர். இவரது புறா மூன்றுநாட்களும்சேர்த்து 23.48 மணி நேரம் பறந்து சாதனை படைத்தது. போட்டியில் சுமார் 40 புறாக்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. புதுக்கோட்டை மாவட்ட மாமன்னர்ரேசிங்பீஜியன் நிர்வாகிகள் சுமார் 20 ஆண்டு காலமாக இது போன்ற போட்டிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.



▶ புதுக்கோட்டை பாஜக மேற்கு மாவட்டம் தெற்கு ஒன்றியம் கவிநாடு கீழவட்டம் பஞ்சாயத்தில் மாநில பொதுக்குழு உறுப்பினர் மயில் சுதாகர்,வர்த்தக பிரிவு மாவட்ட தலைவர் பிரசாத்,விவசாய அணி மாவட்ட துணை தலைவர் பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் மக்கள் நலனிற்கு எதிராகவும், தமிழகத்தின் வளர்ச்சிக்கு எதிராகவும் செயல்பட்டு வரும் திமுக அரசைக் கண்டித்து, அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும், கனிம வளக் கொள்ளையினைத் தடுக்க வேண்டும், பள்ளி கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

# அறந்தாங்கியில் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஐந்து பேர் கைது

அறந்தாங்கி, ஜூலை. 26–

அறந்தாங்கியில் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஐந்து பேரை கைது செய்துள்ளதாக மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட காவல்துறை வெளியிட்டு இருக்கக்கூடிய செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டேயின் தனிப்படை போலீசார். அறந்தாங்கி காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் பாலியல் தொழில் நடத்தி வந்த தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அடுத்த பட்டத்துஊரணி துரைமாணிக்கம் மகள் உமா மகேஸ்வரி, அறந்தாங்கி எல்என்புரம் காந்தி நகர் சரவணன் மனைவி பூமணி, அதே பகுதியை சேர்ந்த மஸ்தான் கனி மனைவி அஜ்மீர் பானு, தாஸ் மகன் அருண், அறந்தாங்கி கோங்குடி கல்லம்பட்டியை சேர்ந்த சின்னகருப்பு மகன் சுரேஷ் ஆகியோரை கைது செய்த தனிப்படை அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். பாலியல் தொழில் ஈடுபட்ட பெண்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்பட்டு காப்பகத்தில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்று அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








▶ புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு மருத்துவமனையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் வீட்டு வசதி வாரியத் தலைவர் பி.கே வைரமுத்து மகன் குமாரசாமி பிறந்த நாளை முன்னிட்டு திருமயம் அண்ணா மருத்துவமனையில் நேற்று பிறந்த குழந்தைகளுக்கு கிப்ட் பாக்ஸ்களும் பழங்களும் வார்டு வாரியாக சென்று குமாரசாமி வழங்கினார், மேலும் இந்நிகழ்ச்சியில் டாக்டர் செவிலியர்கள் அண்ணா திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகள் தொண்டர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு அஞ்சலகத்தில் வேலை காத்துள்ளது

புதுக்கோட்டை , ஜூலை. 26–

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அஞ்சலகங்களில் ஆயுள் காப்பீட்டுக்கான நேரடி முகவர்கள் மற்றும் களஅதிகாரிகள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

புதுக்கோட்டை அஞ்சல் கோட்டை கண்காணிப்பாளர் முருகேசன் வெளியிட்டு இருக்கக்கூடிய செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசின் அஞ்சல் மற்றும் கிராமிய அஞ்சல் ஆயுள் காப்பீடு வணிகம் செய்வதற்காக நேரடி முகவர்களாக செயல்பட விண்ணப்பிக்கலாம். தேர்ந்தெடுக்கப்படுவோர். செய்யும் வணிகத்துக்கேற்ப தொடர்ந்து வருமானம் வரும் வகையில் நல்ல ஊக்கத்தொகை வழங்கப்படும். வயது வரம்பு: 18 வயது, நிரம்பிய ஆண், பெண் இருபாலரும் கல்வி தகுதி குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். மேலும் வேலை இல்லாதோர், சுய தொழில் புரிவோர், முன்னாள் ராணுவத்தினர். அங்கன்வாடி ஊழியர்கள். ஓய்வு பெற்ற மத்திய / மாநில அரசு ஊழியர்களும், ஓய்வு பெற்ற GDS ஊழியர்களும் விண்ணப்பிக்கலாம். (LIC முகவர்கள் நிராகரிக்கபடுவார்கள்.)

தேர்ந்தெடுக்கப்படுவோர் ரூ 5000/- க்கு NSC அல்லது KVPபத்திரத்தை இந்திய குடியரசுத் தலைவருக்கு ஈடு செய்து சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் உரிமம் முடியும் போது பத்திரம் திருப்பித் தரப்படும். விண்ணப்பதாரர்கள். தங்களின் கல்வி தகுதி/ வயதுத் தகுதி, இருப்பிடச் சான்று ஆதார் எண், PAN CARD இவற்றிற்கான அசல் மற்றும் நகல்களுடன் 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விருப்பமுள்ளோர் ஆகஸ்ட் 04, 2023, (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11 மணிக்கு, கீழ்க்கண்ட முகவரியில் நடைபெறும் நேர்காணலில் பங்கேற்கலாம். அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், புதுக்கோட்டை அஞ்சல் கோட்டம், (மேனா காம்ப்ளக்ஸ் 1வது மாடி, மேலராஜ வீதி, தலைமை அஞ்சலகம் எதிரில்) புதுக்கோட்டை-622001, மேலும் விவரங்களுக்கு 04322-221220,8072266355 என்ற நம்பரில் தொடபுக்கொள்ளவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மணிப்பூர் கலவரத்தை தடுக்ககோரி

# சென்னை கல்லூரி மாணவ, மாணவிகள் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பும் போராட்டம்

பெரம்பூர், ஜூலை.26

சென்னை வியாசர்பாடி அம்பேத்கர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதிரே நேற்று அனைத்து இந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்து இந்திய மாணவர் பெருமன்றம் மற்றும் அம்பேத்கர் கல்லூரி மாணவ- மாணவிகள் இணைந்து மணிப்பூரில் நடக்கும் கலவரத்தை கண்டுகொள்ளாத மத்திய அரசையும், மணிப்பூர் மாநில அரசையும் கண்டித்தும், மணிப்பூர் கலவரத்தை தடுக்க வலியுறுத்தியும் பிரதமர் மோடிக்கு தபால் அனுப்பும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் அனைத்து இந்திய இளைஞர் பெருமன்ற(ஏ.ஐ.ஒய்.எப்.) மாவட்ட செயலாளர் சுரேஷ், அனைத்து இந்திய மாணவர் பெருமன்றம் (ஏ.ஐ.எஸ். எப்.) மாவட்ட செயலாளர் வசந்த பாரதி ஆகியோர் தலைமையில் ஏ.ஐ.ஒய்.எப். மாநில தலைவர் வெங்கடேசன் மற்றும் கல்லூரி மாணவ- மாணவிகள் கலந்துகொண்டு மணிப்பூர் கலவரத்தை தடுக்க கோரி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி, அங்கிருந்த தபால் பெட்டியில் போட்டனர். வருகிற 2-ந்தேதி வரை தமிழகம் முழுவதும் மாணவர் அமைப்பினர் பிரதமர் மோடிக்கு இது தொடர்பாக 25 லட்சம் இ-மெயில் மற்றும் கடிதம் அனுப்ப உள்ளதாகவும் தெரிவித்தனர்.

### அறந்தாங்கியில் ரூ.18.50லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட

# புதிய அரசு பள்ளி கட்டிடத்தை எம்எல்ஏ ராமச்சந்திரன் திறந்து வைத்தார்



அறந்தாங்கி, ஜூலை.25–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ரெத்தினக்கோட்டை ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வரும் நிலையில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டித்தரக்கோரி ஊராட்சி நிர்வாகம் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் சார்பில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் என். டி.ராமச்சந்திரனிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கடந்தாண்டு ரூ.18.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது பள்ளி கட்டிட பணிகள் நிறைவுற்ற நிலையில் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசரின் மகனும் அறந்தாங்கி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினருமான ராமச்சந்திரன் திறந்து வைத்தார்

நிகழ்ச்சியில் அறந்தாங்கி வருவாய் வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் மாவட்ட கல்வி அலுவலர்கள் அரசுத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# கூடலூர், பந்தலூரில் பருவமழை தீவிரம் தமிழக கேரள வழித்தடத்தில் போக்குவரத்து பாதிப்பு



உதகை , ஜூலை. 26–

கூடலூர், பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், ஆங்காங்கே மரங்கள் விழுந்து தமிழக - கேரள வழித்தடத்தில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதுடன், வீடு சீரமைப்பு பணியின்போது இடிபாடுகளில் சிக்கி இருவர் காயமடைந்தனர்.

நீலகிரி மாவட்டம் உதகை, குந்தா, கூடலூர், பந்தலூர் தாலுகாக்களில் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கடந்த சில நாட்களாக சூறாவளிக் காற்று வீசியதால் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால், போக்குவரத்து தடைப்பட்டதுடன், நீர் மற்றும் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், திங்கள்கிழமை காற்றின் தீவிரம் சற்று குறைந்திருந்தது. உதகையிலிருந்து பார்சன்ஸ்வேலி செல்லும் சாலை கவர்னர்சோலை பகுதியில் காலை மரம் விழுந்ததால், அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தீயணைப்புத் துறையினர் சென்று மரத்தை வெட்டி அகற்றிய பிறகு போக்குவரத்து சீரானது. கூடலூரில் இருந்து கேரள மாநிலம் வயநாட்டுக்கு செல்லும் மலைப் பாதை நெலாக்கோட்டை அருகே கூவச்சோலை பகுதியில் கனமழையால் சாலையின் குறுக்கே மூங்கில் தூர் பெயர்ந்து விழுந்தது.

இதனால், அவ்வழியாக போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டது. கூடலூர் தீயணைப்புத் துறையினர் மீட்பு உபகரணங்களுடன் விரைந்து சென்று, நெடுஞ்சாலைத் துறையின் பொக்லைன் இயந்திரம் உதவியுடன் மூங்கில் தூர்களை அகற்றி போக்குவரத்தை சீரமைத்தனர். இதனால், அந்த சாலையில் சுமார் இரண்டரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கூடலூர் நகர் காசிம்வயல் பகுதியில் மொய்தீன் என்பவர் தனக்கு சொந்தமான பழைய வீட்டை தொழிலாளர்கள் உதவியுடன் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது, திடீரென வீட்டின் ஒரு பக்க சுவர் இடிந்து விழுந்தது. இதில் தொழிலாளர்கள் சசிகுமார் (50), பாபு (30) ஆகியோர் இடிபாடுகளில் சிக்கினர்.

அக்கம்பக்கத்தினர் விரைந்து வந்து இருவரையும் மீட்டு, கூடலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். வட்டாட்சியர் ராஜேஸ்வரி உட்பட வருவாய் துறையினர் சென்று பார்வையிட்டனர். அதைத்தொடர்ந்து, அந்த பணியை உடனடியாக நிறுத்த உத்தரவிட்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் திங்கள் கிழமை நிலவரப்படி அதிகபட்சமாக அவலாஞ்சியில் 102 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது. சேரங்கோடு - 94, நடுவட்டம் - 87, பந்தலூர் - 82, அப்பர் பவானி - 72, கூடலூர் - 60, ஓவேலி - 56, செருமுள்ளி - 58, பாடந் தொரை - 55, தேவாலா - 46, கோடநாடு - 17, கிளன்மார்கன் - 14, கேத்தி - 13, கல்லட்டி - 13, மசினகுடி - 11, உதகை - 10, பாலகொலா - 10, குன்னூர் - 6 மில்லி மீட்டர் மழை பதிவானது.




▶ மணிப்பூரில் பழங்குடி பெண்களை நிர்வாணமாக இழுத்துச் சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த கொடூர சம்பவத்தை கண்டித்தும் இந்த சம்பவத்தை கண்டு கொள்ளாத மாநில பாஜக அரசை பதவி விலகக் கோரியும் மத்திய அரசை கண்டித்தும் காரைக்கால் மாவட்ட அனைத்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் காரைக்கால் மாவட்டத் தலைவர் ஜெயினுல் ஆபீதீன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மணிப்பூர் அரசுக்கு எதிராகவும், மத்திய அரசுக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் தமிழ்நாடு ஜவுஹித் ஜமாத் மாநில செயலாளர் முகமது ஒளி கலந்துகொண்டு கண்டன உரை ஆற்றினார்.

# பழனியப்பா நகர் குடியிருப்போர் நலச்சங்கப் பொதுக்குழு கூட்டம்



புதுக்கோட்டை , ஜூலை. 26–

புதுக்கோட்டை திருக்கோகர்ணம், பழனியப்பா நகர் குடியிருப்போர் நலச்சங்கப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் சத்தியராம் இராமுக்கண்ணு தலைமை வகித்தார். நகரில் நிலவிவரும் பிரச்சனைகள் குறித்து பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைக் கூறினர். பரிசீலனைக்குப்பின் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

24.7.2023 காலை சுமார் 7.15 மணிக்கு தனது வீட்டிலிருந்து நடை பயிற்சிக்குச் சென்று கொண்டிருந்த ஓய்வு பெற்ற வருவாய் அலுவலர் (D.R.O) ரெத்தினம் என்பவர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 81/4 பவுன் தங்கத்தாளிச் செயினை எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு மர்பநபர்கள் பறித்துக் கொண்டு சென்றுவிட்டனர். அவர் சத்தம் போட அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் வருவதற்குள் மாயமாய் மறைந்து விட்டார்கள். பட்டப் பகலில் ஆள் நடமாட்டம் அதிகமாகவுள்ள அந்தப்பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்பது அதிர்ச்சியளிக்கின்றது. திருக்கோகர்ணமம் காவல் நிலையத்தில் உடனடியாகப் புகார் அளிக்கபட்டுள்ளது. அவர்களது விசாரனை தொடர் ரோந்து கண்காணிப்பு இருந்தாலும், சாலைகள் சந்திக்கும் இடத்திலுள்ள தங்கள் வீகளில் கண்காணிப்பு கேமிரா பொறுத்துவதற்கு முன்வந்துள்ள 10 சங்க உறுப்பினர்களை நகர் நலச்சங்கம் பாராட்டுகிறது. குற்றவாளிகளை கண்டுபிடிக்கவும், இப்பகுதியை அவசியம் காவல்துறை கண்காணிப்பிற்குள் கொண்டுவர வேண்டும் என்றும் காவல்துறையைக் கேட்டுக்கொள்கிறது.

பழனியப்பா நகர் மற்றும் அபிராமி நகருக்கு எல்லைப்பட்டியிலிருந்து கோவில்ப்பட்டி மேல்நிலை நீரத் தேக்கத் தொட்டிக்குச் செல்லாமல் 1996 முதல் நேரடியாக இவ்விரு நகருக்கும் பிரத்தியோகமாக வந்துகொண்டிருந்த தண்ணீரை இடையில் பல இடங்களில் சம்மந்தப்பட்ட எந்த அலுவலரின் ஆணையின்றித் துண்டித்து குழாய்கள் செருகி கோவில்ப்பட்டி நகராட்சிப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது. இதனால் இருநகரலிலுள்ள சுமார் 500 குடும்பங்கள் போதுமான அளவு தண்ணீர் இல்லாமல் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதற்கு 9A நத்தம்பண்ணை பஞ்சாயத்து மூலம் நகராட்சிக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. இதனை உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைரின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிகாரம் தேடிக்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

டாக்டர் டி.எஸ்.இராமமூர்த்தி பழனியப்பா நகர் குடியிருப்போர் நலச்சங்கத்துணைத் தலைவராகவும், அரவிந்த் இணைச் செயலாளராகவும் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். துணைத் தலைவர் அட்வகேட் சு.முத்தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில், பல்வேறு மேம்பாட்டு திட்டப் பணிகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்





காஞ்சிபுரம்,ஜூலை,26

காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு மேம்பாட்டு திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன் கீழ் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மாருதி என்கிளேவ் பூங்காவினையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-202-ன் கீழ் ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டியில் ஏ.ஆர் நகரில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பூங்காவினையும், ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிட்டி பேஸ்-II பகுதியில் பூங்கா அமைத்தல் பணியினையும், ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள திருக்குளம் மேம்பாட்டு பணியினையும், ரூ.48.50 இலட்சம் மதிப்பீட்டில், வன்னியர் பட்டு பகுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குளம் மேம்பாட்டு பணியினையும் திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நபார்டு வங்கி RIDF XXV திட்டத்தின் கீழ் ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கால்நடை மருத்துவமனை கட்டிடத்தையும், திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியையும் திறந்து வைத்து பார்வையிட்டார்.

மேற்கண்ட நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாங்காடு நகர மன்ற தலைவர் சுமதி முருகன், மாங்காடு நகர மன்றதுணைத்தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, மாங்காடு நகராட்சி ஆணையர் இரா. சுமா, மாங்காடு நகராட்சியின் 18வது வார்டு நகரமன்ற உறுப்பினர் மேனகா கணபதி மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



▶ சென்னை எண்ணூர் சுனாமி குடியிருப்பு 142 வது பிளாக் குடியிருப்பில் வசித்து வருபவர் பெயின்டர் விக்னேஷ் இவர் வீட்டில் பெண் மயில் ஒன்று இறக்கை பகுதியில் அடிப்பட்டு லேசான காயத்துடன் பறந்து வந்துள்ளது. இதனை பார்த்த விக்னேஷ் மற்றும் அவரது மனைவி இருவரும் உடனடியாக அருகில் உள்ள எண்ணூர் காவல் நிலையத்தில் பெண் மயிலை ஒப்படைத்தனர். மயிலை பெற்றுக் கொண்ட போலீசார் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். மயிலை காவல் நிலையத்தில் ஒப்படைத்த விக்னேஷை போலீசார் பாராட்டினர்.



▶ மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா மேமாத்தூர் ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்பப்பதிவு முகாம் நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அர்ச்சனா, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் யுரேகா, தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன் ஊராட்சி மன்ற தலைவர் தட்சணாமூர்த்தி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பல உடன் இருந்தனர்.

# மெரினாவில் வாக்குவாதம் போலீஸ்காரரை இரும்பு கம்பியால் பலமாக தாக்கிய குதிரை ஓட்டுநர் கைது

சென்னை, ஜூலை,26

சென்னையை அடுத்த திருநின்றவூரைச் சேர்ந்தவர் தீபக் (வயது 27). இவர் தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் போலீஸ்காரராக பணி செய்கிறார். தீபக் சென்னை மெரினா கடற்கரைக்கு வந்தார். கலங்கரை விளக்கம் பின்புறம் கடற்கரை மணலில் உட்கார்ந்து காற்று வாங்கினார். தனது நண்பர்கள் வருகைக்காக அங்கு காத்திருந்தார். அப்போது குதிரையில் குழந்தைகளை உட்கார வைத்து விளையாட்டு காட்டிக்கொண்டிருந்த குதிரை ஓட்டுநர் கிஷோர் (20) என்பவருக்கும், போலீஸ்காரர் தீபக்கிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. தீபக் போலீஸ்காரர் என்பது கிஷோருக்கு தெரியாது.

ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றி இருவரும் கைகலப்பில் ஈடுபட்டனர். கிஷோர், குதிரை ஓட்டுவதற்காக கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால், தீபக்கை அடித்து நொறுக்கி விட்டதாக கூறப்படுகிறது. இதில் தீபக் பலத்த காயம் அடைந்தார். ரத்தகாயத்துடன் கடற்கரை மணலில் சுருண்டு கிடந்தார். கிஷோர், குதிரையில் ஏறி தப்பி ஓடப்பார்த்தார். அங்கு திரண்டு வந்த பொதுமக்கள் கிஷோரை பிடித்து மெரினா போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். காயம் அடைந்த போலீஸ்காரர் தீபக், ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக, மெரினா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். கிஷோர் கைது செய்யப்பட்டார். அவர் பெரம்பூரைச் சேர்ந்தவர்.

# காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரியில் சர்வதேச சிறுதானிய ஆண்டு விழா




காரைக்கால் , ஜூலை.26-

காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரியில் சர்வதேச சிறுதானிய ஆண்டு விழா ரோட்டரக்ட் சங்கம் மூலமாக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு காரைக்கால் ரோட்டரி சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்புற செய்தனர். முன்னதாக பஜன்கோவின் ரோட்ரக்ட் சங்க ஒருங்கிணைப்பாளர் ஜார்ஜ் பேரடைஸ் வரவேற்புரை வழங்கினார், கல்லூரி முதல்வர் அ.புஷ்பராஜ் உணவில் சிறுதானியத்தின் முக்கியத்துவம் மற்றும் உணவின் நெறிமுறைகள் குறித்து பேசினார்.

அடுத்ததாக ரோட்டரி சாங்கத் தலைவர் அருள்ராஜ் பேசுகையில், வேளாண் கல்லூரி மாணவர்கள் சிறுதானியத்தின் சிறப்பம்சங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சிறுதானியத்தின் சிறப்பங்களை வெளிப்படுத்தும் விதமாக- சிறுதானிய உணவு தயாரித்தல், சிறுதானிய மலர்கொத்து தயாரித்தல் மற்றும் சிறுதானியத்தை கொண்டு ரங்கோலி ஆகிய போட்டிகள் மாணவர்களிடையே நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி ரோட்டரி சங்கத்தின் மூலமாக பரிசளிக்கப்பட்டது.

மேலும் விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் சிறுதானிய சிற்றுண்டி வழங்கப்பட்டது. சிறுதானியத்தை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகபல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.விழாவில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# சீர்காழி அருகே தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பாக ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



சீர்காழி.ஜூலை,26

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பாக தமிழகத்திற்கு வழங்க வேண்டிய காவிரி நீரை கர்நாடக அரசு உடனே வழங்க வலியுறுத்தியும், ஒன்றிய அரசு விவசாயிகள் விரோத கொள்கையை கைவிட வேண்டியும் தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற்றது.

இதில் தமிழகத்திற்கு ஜூன் - ஜூலை மாதங்களில் வழங்க வேண்டிய காவிரி நீரை கர்நாடகா அரசு உடனடியாக திறந்து விட கோரியும், காவிரி நதிநீர் ஆணையம் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் வழங்க உத்தரவிட வலியுறுத்தியும், ஒன்றிய மோடி அரசு விவசாயிகள் விரோத கொள்கைகளை கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இந்தியாவில் அதிகரித்து வரும் விவசாயிகளின் தற்கொலை தடுத்து நிறுத்திட வலியுறுத்தியும், சீர்காழி தாலுகாவில் சென்ற ஆண்டு பெய்த அதிக மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் அரசு அறிவித்தபடி பயிர் காப்பீட்டு தொகையை வழங்கிட வேண்டியும், இம்மாத இறுதிக்குள் அனைத்து பாசன வடிகால் வாய்க்கால்களையும் தூர்வாரி நீர் மேலாண்மைக்கான ரெகுலேட்டர்களை கட்டி தர கோரியும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறுவை தொகுப்பை பாரபட்சமின்றி விண்ணப்பித்த அனைத்து விவசாயிகளும் வழங்க வலியுறுத்தி இந்த கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏழு அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற தவறினால் விரைவில் மாபெரும் போராட்டம் நடைபெறும் என விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கடையம் ஒன்றியத்தில் அடிப்படை வசதி கேட்டு பொதுமக்கள் ஆட்சியரிடம் மனு



தென்காசி,ஜூலை.26-

கடையம் ஒன்றியம் முதலியார் பட்டி ரஹ்மத் நகரில் அடிப்படை வசதி கேட்டு அப்பகுதி மக்கள் எஸ்.டி .பி.ஐ கட்சியினருடன் இணைந்து தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர். அந்த மனுவில் தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றியம்முதலியார்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ரஹ்மத் நகர் பகுதியில் 80 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 10 வருடங்களாக வசித்து வருகின்றனர். இப்பகுதியில் அடிப்படை வசதிகளுக்கான குடிநீர், கழிவுநீர் ஓடை , சாலை வசதிகள் செய்து தரக்கோரி பொதுமக்கள் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் பாதிக்கப் படுவதோடு மழை காலங்களில் கழிவுநீர் சாலைகளில் தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் மர்ம காய்ச்சலினால் குழந்தைகள் தொடர்ந்து பாதிக்கப் படுகின்றனர். இதனை கண்டித்தும் உடனடியாக அப்பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரியும் எஸ்டிபிஐ கட்சியின் மாவட்ட பொதுச்செயலாளர் செய்யது மஹ்மூத் தலைமையில் ஆண்கள், பெண்கள் என 50 க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர், நிகழ்வில் முதலியார்பட்டி நகரத் தலைவர் அப்துல் அஜீஸ், நகர செயற்குழு உறுப்பினர் காசிம் உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு கறம்பக்குடியில் விழிப்புணர்வு பேரணி



கறம்பக்குடி, ஜூலை.26-

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து நடத்தும் ஆறாவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை முன்னிட்டு கறம்பக்குடி ஒன்றியத்தில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.இந்த நிகழ்விற்கு வட்டார கல்வி அலுவலர் சு.கிருஷ்ணவேனி தலைமை வகித்தார், பேரூராட்சித் தலைவர் உ.முருகேசன் முன்னிலை வகித்தார். கறம்பக்குடி காவல் ஆய்வாளர் செந்தூர் பாண்டியன் கொடியசைத்து பேரணியை துவங்கி வைத்தார்.

இதில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அனுமார் கோவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, ரீனா மெர்சி மெட்ரிகுலேஷன் பள்ளியை சேர்ந்த 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் பேரணியில் பங்கேற்றனர், பேரணியில் கறம்பக்குடி வர்த்தக சங்கத் தலைவர் சாந்தியமூர்த்தி, வட்டார வள மைய மேற்பார்வையாளர் சு.ராஜலிங்கம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மணிமேகலை, ஆசிரியர் பயிற்றுனர் குமாரசாமி, கோகுல கிருஷ்ணன், தலைமை ஆசிரியர் விசுவாசம்,

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட இணை செயலாளர் ஷோபா, ஒன்றியத் தலைவர் அந்தோணிசாமி ,கவிஞர் மிடறு முருகதாஸ், ஆசிரியர்கள் ரெங்கசாமி, சரண்யா, செல்வராணி, சத்தியமூர்த்தி, அசோக்குமார் ஆகியோர் பேரணியில் பங்கேற்றனர்.

பேரணியானது கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் துவங்கி கறம்பக்குடி சீனிக்கடை முக்கம் வரை புத்தக வாசிப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்களை எழுப்பி நடைபெற்றது.

நிகழ்விற்கு வருகை தந்தவர்களை தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் கறம்பக்குடி ஒன்றியச் செயலாளர் சாமியப்பன் வரவேற்றார், நிகழ்வினை தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிவானந்தம் ஒருங்கிணைத்தார்,அறிவியல் இயக்க நிர்வாகி வீரபாலன் நிறைவாக நன்றி கூறினார்.

# மணிப்பூர் கலவரத்தை தடுக்க தவறிய மத்திய அரசை கண்டித்து அரியலூரில் திமுக மகளிர் அணி ஆர்ப்பாட்டம்




அரியலூர், ஜூலை.26-

மணிப்பூர் கலவரத்தை தடுக்க தவறிய மத்திய அரசை கண்டித்து, திமுக அரியலூர் மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி சார்பில், அரியலூர் அண்ணா சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. திமுக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி ராஜேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மீனா சாமிநாதன் ஆகியோர் தலைமை வகித்தனர், மகளிர் அணி மாவட்ட துணை செயலாளர் லதா பாலு வரவேற்று பேசினார்.

அரியலூர் நகராட்சி சேர்மன் சாந்தி கலைவாணன், திருமானூர் ஒன்றிய குழு தலைவி சுமதி அசோக சக்கரவர்த்தி, உடையார் பாளையம் பேரூராட்சி தலைவி மலர்விழி ரஞ்சித் குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கீதா ஜெயவேல், மாவட்ட மகளிர் அணி தலைவி விஜயலட்சுமி, மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவி ராணி சந்திரசேகர், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணைத் தலைவர் எழிலரசி, குழுமூர் சுமதி கருணாநிதி உள்பட, திமுக மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழகங்களின் மகளிர் அணி நிர்வாகிகள் பலரும், கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், திமுக மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெருநற்கிள்ளி, திமுக மாநில சட்ட திருத்த குழு துணைச் செயலாளர் சுபா சந்திரசேகர் உள்ளிட்டோர் நிறைவுரையாற்றினர்

# சங்கரன்கோவிலில் ஆடித்தபசை முன்னிட்டு டிஜிட்டல் வாகனம் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு



சங்கரன்கோவில். ஜூலை.26-

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சங்கரன்கோவில் சங்கரநாராயணர் சுவாமி கோயிலில் பிரசித்தி பெற்ற ஆடி தபசு திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஆடித்தபசை முன்னிட்டு சுவாமி சன்னதியில் சங்கரன்கோவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம் தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவில் நகர்புறம்1 பிரிவு சார்பில் சிறப்பு மின்வாரிய சேவை மையம் துவக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு மின்சார சிக்கனம் ,மின்சாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது மின் சாதனங்களில் இருந்து எப்படி பாதுகாத்துக் கொள்வது என்பதை உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வுகள் அடங்கிய டிஜிட்டல் வாகனம் துவக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்து வாகனத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். தொடர்ந்து பொதுமக்களுக்கு மின்சார சிக்கனம் மற்றும் மின் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பிளாஸ்டிக்கை ஒழிப்போம் வாசகம் அடங்கிய மஞ்சள் பை, எல் இ டி பல்பு , கர்சீப் வழங்கப்பட்டது. மேலும் மின் கட்டண அட்டைகள் வழங்கப்பட்டது. இதில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலா சங்கர பாண்டியன், மாவட்ட பொருளாளர் சரவணன், மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெரியதுரை, நகரச் செயலாளர் பிரகாஷ் ,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்தி மற்றும் மின்வாரிய உதவி பொறியாளர்கள் , பால்ராஜ் கணேஷ் ராமகிருஷ்ணன், பாலசுப்பிரமணியன், முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை சங்கரன்கோவில் நகர்ப்புற பிரிவு 1உதவி மின் பொறியாளர் கருப்பசாமி பணியாளர்கள் பொன்சுப்புராஜ், அரிராஜ், ராமமூர்த்தி, செல்லசாமி, முருகன், பேச்சி முத்து, மோகன்தாஸ் , பணியாளர்கள் சுப்பிரமணி, மயில் ராஜன், நாகராஜ், லட்சுமணன், ஆகியோர் செய்திருந்தனர்.

# செந்தில் பாலாஜியை விடுவிக்க கோரும் ஆட்கொணர்வு வழக்கு முடித்துவைப்பு

சென்னை , ஜூலை.26-

சட்ட விரோத பணபரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜியை விடுவிக்கக் கோரி அவரது மனைவி மேகலா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை முடித்துவைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணையின்போது, தான் பிறப்பித்த தீர்ப்பில் உறுதியாக இருப்பதாக நீதிபதி நிஷாபானு தெரிவித்துள்ளார்.

சட்ட விரோத பணபரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜியை விடுவிக்கக் கோரி அவரது மனைவி மேகலா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த நீதிபதிகள் நிஷாபானு, பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய இரு நீதிபதிகள் அமர்வு,இருவேறுதீர்ப்புகளை வழங்கியது. இதனால், வழக்கை விசாரிக்கும் மூன்றாவது நீதிபதியாக நீதிபதி சி.வி.கார்த்திகேயன் நியமிக்கப்பட்டார். இந்த வழக்கின் மூன்றாவது நீதிபதியான சி.வி. கார்த்திகேயன் பிறப்பித்த தீர்ப்பில்,செந்தில்பாலாஜியை, காவலில் வைத்து விசாரிக்க அமலாக்கத் துறையினருக்கு அதிகாரம் உள்ளது. இந்த இடத்தில், நீதிபதி பரத சக்கரவர்த்தியின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதோடு, அதில் உடன்படுகிறேன். செந்தில் பாலாஜியின் கைது சட்டப்படியானது.

செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை எப்போதில் இருந்து காவலில் எடுத்து விசாரிக்கலாம் என்பது குறித்து முடிவெடுக்க, இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வான நீதிபதி நிஷாபானு, நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்குப் பட்டியலிட தலைமை நீதிபதிக்கு நீதிபதி சி.வி.கார்த்திகேயன் பரிந்துரைத்திருந்தார். இந்தப் பரிந்துரையை ஏற்று, இரு நீதிபதிகள் அமர்வுக்கு தலைமை நீதபதி ஒப்புதல் அளித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து இந்த வழக்கு, நீதிபதிகள் நிஷாபானு, பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி நிஷாபானு, "இந்த வழக்கைப் பொறுத்தவரை, சொல்வதற்கு ஏதுமில்லை. இந்த வழக்கில் ஏற்கெனவே நான் பிறப்பித்த தீர்ப்பில் உறுதியாக இருக்கிறேன்" என்று தெரிவித்தார். அப்போது குறுக்கிட்ட மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "நீதிமன்ற காவலை முடிவு செய்வதற்காகத்தான் மூன்றாவது நீதிபதி, இந்த வழக்கை மீண்டும் இதே அமர்வில் விசாரணைக்குப் பட்டியலிட பரிந்துரைத்துள்ளார்" என்று தெரிவித்தார்.

அப்போது செந்தில் பாலாஜி மனைவி மேகலா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, "இந்த விவகாரம் தொடர்பாக இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது" என்று தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த வழக்கின் அனைத்து அம்சங்கள் குறித்தும் உச்ச நீதிமன்றமே முடிவெடுக்கும். எனவே, இந்த வழக்கை இங்கு நிலுவையில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி வழக்கை முடித்துவைத்து உத்தரவிட்டனர்.




# உதயநிதி அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு விளையாட்டுத் துறையில் புத்துணர்ச்சி முதல்வர் ஸ்டாலின் புகழாரம்

சென்னை ,ஜூலை.26-

"உதயநிதி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக பொறுப்பேற்றப் பிறகு, விளையாட்டுத் துறையே ஒரு புத்துணர்ச்சி கண்டிருக்கிறது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

சென்னையில் முதலமைச்சர் கோப்பை நிறைவு விழா நேரு உள் விளையாட்டரங்கில் நேற்று நடந்தது. இதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார். இந்த விழாவில் முதல்வர் பேசுகையில், "தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விளையாட்டுப் பிள்ளையாக




இருக்கிறார்களே என்று வளர்ந்த பிள்ளைகளைப் பார்த்து சில பெற்றோர்கள் நினைப்பதுண்டு. விளையாட்டுத் துறை அமைச்சராக நம் பிள்ளை சிறப்பாக செயல்படுகிறார் என்று பெற்றவரை மகிழ வைக்கக்கூடியவராக உதயநிதி இருக்கிறார்.

விளையாட்டைப் பார்ப்பவர்களுக்கு களிப்பாக இருக்கும். விளையாட்டுப் போட்டிகளை நடத்துபவர்களும், அதில் கலந்துகொள்பவர்களும் பொறுப்பாக இருக்க வேண்டும். இந்நிகழ்வை மிகுந்த பொறுப்புடன் நடத்தியிருக்கும் விளையாட்டுத் துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது வாழ்த்துகள்.

நேரு உள் விளையாட்டரங்கைப் பார்க்கும்போது, என் நினைவுகள் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்குச் செல்கிறது. இங்குதான், கடந்த ஆண்டு அந்த நிகழ்வின் தொடக்க நிகழ்ச்சியும், நிறைவு நிகழ்ச்சியும் நடைபெற்றது. நீங்கள் அனைவரும் அந்த நிகழ்ச்சியைப் பார்த்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். மற்ற விளையாட்டு நிகழ்ச்சிகளின்போது நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் போல இல்லாமல், தமிழகத்தின், இந்திய நாட்டின் வரலாற்றை நமது மண்ணுக்கு விருந்தினராக வந்த வெளிநாட்டு வீரர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் மூலமாக அறிமுகப்படுத்தினோம். அதனால், கிடைத்த பாராட்டு அரசுக்கு மட்டுமல்ல, தமிழகத்துக்கே சொந்தமானது.

அத்தகைய பெருமையைத் தேடித் தந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியின் போதுதான், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என்று நான் அறிவித்தேன். 15 விளையாட்டுகளில், பள்ளி, கல்லூரி, பொதுப் பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என 5 பிரிவுகளின் கீழ் இந்தப் போட்டிகள் நடத்தப்படும் என்று நான் அறிவிப்பு செய்தேன். அந்த அறிவிப்பை நிகழ்த்திக் காட்டிய அமைச்சர் உதயநிதிக்கு பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மே 8ம் தேதி, முதலமைச்சர் போட்டிக்கான தீரன் சின்னத்தையும் அதற்கான பாடலையும் நான் வெளியிட்டேன். ஜூன் 30ம் தேதி தொடங்கப்பட்ட இந்த போட்டிகள் இன்று நிறைவு கண்டுள்ளது. உதயநிதி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றப் பிறகு, விளையாட்டுத் துறையே ஒரு புத்துணர்ச்சி கண்டிருக்கிறது. நான் 2006ம் ஆண்டு கருணாநிதியின் அமைச்சரவையில் அமைச்சராக இடம்பெற்றபோது, பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டது இந்த நேரு உள் விளையாட்டரங்கில்தான்.

இங்குள்ள விளையாட்டு வீரர்களைப் போல நேரு விளையாட்டரங்கம் எனக்கும் சிறப்பான வாய்ப்பை கொடுத்தது. அப்போது நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன். அந்த துறையை நான் நிர்வகிப்பதைப் பார்த்தால், பொறமையாக இருப்பதாக அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி கூறினார். அந்தவகையில் இப்போது எனக்கு விளையாட்டுத் துறையின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. விளையாட்டுத் துறையால், அமைச்சர் பெருமை அடைவதையும், அமைச்சர் உதயநிதியால் விளையாட்டுத் துறை பெரும் அடையும் காட்சிகளை நான் பார்க்கிறேன். இவையெல்லாம் விளம்பரத்துக்காக செய்யப்படுபவை அல்ல. விளையாட்டுத்துறையின் செயல்பாடுகள் மூலம் இத்தகைய பாராட்டுகள் கிடைக்கிறது" என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## 7வது ஹீரோ - ஆசிய சாம்பியன்ஸ் டிராபி, பாஸ் தி பால் டிராபி நிகழ்ச்சியில்

# சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கோப்பையினை காட்சிப்படுத்தினார்

**புதுக்கோட்டை , ஜூலை.26-**

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில், 7வது ஹீரோ - ஆசிய சாம்பியன்ஸ் டிராபி, பாஸ் தி பால் டிராபி நிகழ்ச்சியில், சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று கோப்பையினை காட்சிப்படுத்தினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நடைபெற்றது. பின்னர் சட்ட அமைச்சர் தெரிவித்ததாவது;

இந்தியாவின் விளையாட்டு தாயகமான தமிழ்நாட்டில் பெருமைக்குரிய ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தப்படுவது நமக்கு கிடைத்த மிகப் பெரிய பெருமையாகும். இதன்மூலம் உலக தரத்தில் அனைத்து விதமான போட்டிகளையும் தமிழகத்தில் நடத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு முதலமைச்சர் உருவாக்கியுள்ளார்கள். மேலும்ஹாக்கிவிளையாட்டு வீரர்களிடையே உற்சாகம் மற்றும் ஊக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. ஹாக்கி விளையாட்டு போட்டிகளில் நெடிய பாரம்பரிய நமது இந்திய அணியின் பெருமையை மீட்டெடுக்கும் வகையில் சென்னையில் நடைபெற உள்ள ஹாக்கி போட்டியை சிறப்பான பங்களிப்பை வழங்குவதன் மூலம் 8 பதக்கங்களை வென்ற நமது இந்திய அணிக்கு பெருமை சேர்க்கும் வகையில் அமைந்திடும். புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும்



400 விளையாட்டு வீரர்கள் இருப்பது நமக்கு பெருமைக்குரிய ஒன்றாகும்.

விளையாட்டுத் துறையில் எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு, ஹாக்கி யுனிட் ஆப் இந்தியாவுடன் இணைந்து சர்வதேச அளவிலான 7வது ஹீரோ - ஆசிய சாம்பியன்ஸ் டிராபி, பாஸ் தி பால் டிராபி - 2023 ஹாக்கி போட்டியினை சென்னையில் வருகின்ற 03.08.2023 முதல் 12.08.2023 வரை நடத்தப்படவுள்ளது. இப்போட்டிகளில் இந்தியா, ஜப்பான், கொரியா, பாகிஸ்தான், சீனா மற்றும் மலேசியா என 6 நாடுகள் பங்கேற்று விளையாடுகின்றனர். இப்போட்டியானது முன்பு 2007-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது. தற்போது 16 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சென்னையில் இப்போட்டியானது நடத்தப்படுவது நமது தமிழ்நாட்டிற்கு மிகச் சிறப்பான நிகழ்வாக பார்க்கப்படுகின்றது.

இப்போட்டிக்கான டிராபி - பாஸ் தி பால் டிராபி டூர் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக்தாக்கூர் டெல்லியில் ஆரம்பிக்கப்பட்டு, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு சென்று கடந்த 20.07.2023 அன்று சென்னை வந்தடைந்தது. சென்னையில், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரால் சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டு காட்சிப்படுத்தும் விழா நடைபெற்றது.

மேலும் இப்போட்டிக்கான கோப்பை காட்சிப்படுத்துதல் நமது மாவட்டங்களிலுள்ள விளையாட்டு வீரர்களிடையே ஹாக்கி போட்டிக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் 22.07.2023 அன்று துவங்கப்பட்டுள்ளது. தற்போது புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரி, ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மற்றும் அனைத்து விளையாட்டு வீரர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்றையதினம் போட்டிக்கான கோப்பையினை காட்சிப்படுத்தும் விழா, மாவட்ட நிர்வாகத்துடன், மாவட்ட ஹாக்கி கழகமும் இணைந்து மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ளளார்.

பல்வேறு மாவட்டங்களுக்கு இக்கோப்பையானது (பாஸ் தி பால் டூர்) பயணம் செய்து 01.08.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. கடந்த 2020 ஜப்பான், டோக்கியோ ஒலிம்பிக்கில் நமது இந்தியா வெண்கலத்தை வென்று தேசத்திற்கு பெருமை சேர்த்தது போல இப்போட்டியிலும் இந்திய ஹாக்கி வீரர்கள் சிறப்பாக விளையாடி கோப்பையினை வெல்ல வேண்டும்.

இந்த பாஸ் தி பால் டூர் -ன் நோக்கம் நமது தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவிலான ஹாக்கி வீரர்கள் இந்திய அணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற பாரிஸ்-2024 ஒலிம்பிக்கில் மீண்டும் தங்கம் வெல்ல வேண்டுமென்பதாகும். இந்த சிறப்பான 7வது ஆண்கள் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி - 2023 கோப்பை காட்சிப்படுத்தும் விழாவிற்கு வருகை தந்துள்ள பள்ளி, கல்லூரி, வீரர், வீராங்கனைகள் அனைவரும் சர்வதேச அளவிலான ஹாக்கி போட்டிகளில் பங்குபெற்று நமது தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை தேடிதர வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஹாக்கி விளையாட்டு வீராங்கனைகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி விளையாட்டு அரங்கில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார், வட்டாட்சியர் விஜயலெட்சுமி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அன்னவாசலில் நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை அமுல்படுத்தக்கோரி மனு கொடுக்கும் போராட்டம்

*புதுக்கோட்டை, ஜூலை.26-*

நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தைசெயல்படுத்தக் கோரி புதுக்கோட்டை அன்னவாசல் பேரூராட்சி அலுவலகத்தில் மனுக்கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது.



அரசு அறிவித்தபடி நகர்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்தி பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கு நூறுநாள் வேலைத்திட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தி அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மாநிலம் முழுவதும் பேரூராட்சி அலுவலகம் முன்பாக மனுக்கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. அதனொரு பகுதியாக அன்னவாசல் பேரூராட்சி அலுவலகம் முன்பாக நடைபெற்ற போராட்டத்திற்குவிதொச அன்னவாசல் ஒன்றியச் செயலாளர் தலைமை வகித்தார், ஒன்றியத் தலைவர் சி.ஆறுமுகம் முன்னிலை வகித்தார், போராட்டத்தை தொடங்கி வைத்து மாவட்டப் பொருளாளர் கே.சண்முகம் பேசினார். போராட்டத்தை நிறைவு செய்து மாநில பொதுச்செயலாளர் வீ.அமிர்தலிங்கம் சிறப்புரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் டி.சலோமி, சிபிஎம் ஒன்றியச் செயலாளர் எம். ஆர்.சுப்பையா மற்றும் நிர்வாகிகள் பேசினர்.

ஆயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்ற இந்தப் போராட்டத்தில் 700-க்கும் மேற்பட்ட மனுக்கள் பேரூராட்சி செயல் அலுவலர் ராதாகிருஷ்ணனிடம் ஒப்படைக்கப்பட்டது.

# அறந்தாங்கி அருகே 500 குடும்ப தலைவிகளுக்கு அமைச்சர் மெய்யநாதன் மரக்கன்று வழங்கினார்

*அறந்தாங்கி,ஜூலை.26-*

அறந்தாங்கி அருகே தொழுவங்காடு ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 500 குடும்ப தலைவிகளுக்கு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தென்னங்கன்று மற்றும் மா,பலா, எலுமிச்சை உள்ளிட்ட பழஞ்செடி தொகுப்புகளை வழங்கியும் ரூ 28. லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பள்ளிக்கட்டிடத்தை ஆய்வு செய்தார்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் தொழுவங்காடு ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 300 குடும்பத் தலைவிகளுக்கு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் மா,பலா,எலுமிச்சை உள்ளிட்ட பழஞ்செடி தொகுப்பு மற்றும் தென்னங்கன்றுகளை வழங்கினார்

தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் கட்டுப்பட்டுவரும் நடுநிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டிடங்களின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். நிகழ்ச்சியில் தோட்டக்கலை உதவி இயக்குனர் தீனவர்மன், வேளாண் உதவி இயக்குனர் பத்மபிரியா தொழுவங்காடு ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கிராம பொதுமக்கள் ஐநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.




PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# அகில இந்திய உயர் கல்வி ஆய்வறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏன்? மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஜூலை. 26–



கரோனாவால் அகில இந்திய உயர்கல்வி ஆய்வறிக்கை வெளியிடுவதில் தாமதமாகி வருகிறது. இந்தத் தகவல், விழுப்புரம் எம்.பி.யான டி.ரவிக்குமார் நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பிய வினாவுக்கானப் பதிலில் வெளியாகியுள்ளது. இது குறித்து நேற்று மக்களவையில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அளித்த பதில்: அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு (ஏஐஎஸ்எச்இ) என்பது நாட்டில் உள்ள உயர்கல்வி புள்ளிவிவரங்களின் விரிவான தரவு ஆகும். மாணவர் சேர்க்கை, நிறுவனங்கள் குறித்த தகவல், ஆசிரியர்கள் பற்றிய தகவல் போன்ற பல்வேறு அளவுருக்கள் பற்றிய தரவுகள், ஏஐஎஸ்எச்இயின் கீழ் பதிவு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களால் அதற்கென உருவாக்கப்பட்டுள்ள தளத்தில் ஆண்டுதோறும் பதிவேற்றப்படுகின்றன.

ஏஐஎஸ்எச்இ கணக்கெடுப்பு மாநில அரசுகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவின் மூலம் நடத்தப்படுகிறது. 2019-20 கணக்கெடுப்பின் அறிக்கை வெளியிடுவதும், 2020-21 கணக்கெடுப்புக்கான ஆய்வு தொடங்குவதும் முன்னெப்போதும் இல்லாத உலகளாவிய கோவிட் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டன. 2020-21 ஆம் கல்வி ஆண்டில் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை அதனால் கணிசமாகத் தாமதமானது. டிசம்பர், 2020 வரை கூட அது நீட்டிக்கப்பட்டது. சில இடங்களில் அதற்குப் பிறகும் கூட நடந்தது. மாணவர் சேர்க்கை செயல்முறை முழுமையாக முடிந்த பின்னரே பாடவாரியான மாணவர் சேர்க்கை பற்றிய விரிவான தரவு உயர்கல்வி நிறுவனங்களால் அளிக்கப்படும். மேலும், 2021 ஆம் ஆண்டில் 2 ஆவது கோவிட் அலை கடுமையாக வெடித்தது,

இதில் பல்வேறு துறைகள், மாநில அரசுகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஊழியர்கள் பாதிக்கப்பட்டனர், மேலும் கணக்கெடுப்பைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. ஏஐஎஸ்எச்இ 2020-21 இல் பொறிமுறையானது தரவு சேகரிப்பாகும். இது, அடோப் அக்ரோபேட் வடிவமைப்பில் உள்ள தரவு நிரப்புதலின் பழைய அமைப்பிலிருந்து, பயனருக்கு எளிதான தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட வலை தரவுப் பிடிப்பு வடிவத்திற்கு (டிசிஎப்) தேசிய தகவல் மையத்தால் (என்ஐசி) மேம்படுத்தப்பட்டது. 2019-20 வரை, ஏஐஎஸ்எஸ்இயில் தரவு சேகரிப்புக்கு விண்டோஸ் 2008 அடோப் மென்பொருள் பயன்படுத்தப்பட்டது, இது கிளவுட் சர்வருக்குப் பதிலாக நேரடியான சர்வரில் சேமிக்கப்பட்டது. எனவே, என்ஐசி ஐடி இன்ஃப்ரா-கொள்கைக்கு இணங்க வேண்டும். இதனால், புதிய தகவல் தொழில்நுட்ப அம்சங்களுடன் ஏஐஎஸ்எச்இ போர்ட்டலை மேம்படுத்தவும், வெப்பானது ஏஐஎஸ்எச்இயில் 2021ஆம் ஆண்டில் தகவல்களைச் சேகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏஐஎஸ்எச்ஐயில் 2020–21 கணக்கெடுப்புக்கு முதல் முறையாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, செயல்பாட்டுச் சோதனையைத் தொடர்ந்து, அமைப்பின் விரிவான பாதுகாப்புத் தணிக்கை மற்றும் புதிய அமைப்பைச் செயல்படுத்துவதற்கு முன் மாநில உயர் கல்வி நிறுவனங்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. முதல் டிசிஎப் கணக்கெடுப்பு என்பதால், முந்தைய தரவு அமைப்பு மற்றும் அறிக்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இது ஆய்வின் யூனிட் அளவிலான தரவுகளுடன் சோதிக்கப்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, கணக்கெடுப்பு முடிந்ததும் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏஐஎஸ்எச்இ 2020-21 அறிக்கை, ஏற்கனவே ஜனவரி 2023 இல் வெளியிடப்பட்டது. 2019-20 இல் நாட்டின் மாணவர் சேர்க்கை 3.85 கோடியிலிருந்து 2020-21ல் 4.14 கோடியாக அதிகரித்துள்ளது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பிரம்மோஸ் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்த முடியவில்லை உக்ரைன் விமானப் படை வேதனை

**கீவ் (உக்ரைன்), ஜூலை. 26–**

பிரம்மோஸ் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்த முடியவில்லை. அந்த ஏவுகணைகள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு வளையங்களைத் தாண்டி துல்லியமாக இலக்கை தாக்குகிறது என்று உக்ரைன் விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து பிரம்மோஸ் என்ற சூப்பர்சானிக் ஏவுகணைகளை தயாரித்து வருகின்றன. இது ஒலியைவிட 5 மடங்கு வேகத்தில் சீறிப் பாயக்கூடியது. இந்த ஏவுகணை இந்தியாவில் பிரம்மோஸ் என்றும் ரஷ்யாவில் 'பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட்' என்றும் அழைக்கப்படுகிறது. ரஷ்யா-உக்ரைன் இடையே 500 நாட்களுக்கும் மேலாக போர் நீடிக்கும் நிலையில் இரு நாடுகளும் அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்தி வருகின்றன.

ரஷ்யாவின் கேஎச்-55, 3எம்-14 காலிபர், ஆர்-27 இசட்ஒய்பி, ஆர்கே- 55 கிரானட், ஆர்எஸ்எம்-56 புலாவா, ஆர்-29 ஆர்எம் ஸ்டில், ஆர்-29 வைசோட்டா, ஓடிஆர்-21 டோக்கா, எஸ்எஸ்-1 ஸ்குட், 3எம்-54 காலிபர் கிளப், ஆர்எஸ்டி-10 பயனீர், 9கே720 இஸ்கந்தர், ஆர்எஸ்-26 ரூபேக், ஆர்எஸ்-28 சர்மட் உள்ளிட்ட பல்வேறு வகையான ஏவுகணைகள் போரில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட உக்ரைனுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் அதிநவீன ஆயுதங்கள், ஏவுகணைகளை தாராளமாக வழங்கி வருகின்றன. இந்த ஏவுகணைகள் மூலம் ரஷ்யாவின் ஏவுகணைகளை உக்ரைன் ராணுவம் சுட்டு வீழ்த்தி வருகிறது.

ஆனால், ரஷ்யாவின் குறிப்பிட்ட வகை ஏவுகணைகளை மட்டும் சுட்டு வீழ்த்த முடியவில்லை என்று உக்ரைன் விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது ரஷ்யாவின் 'பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட்' ஏவுகணை ஆகும்.

இதுகுறித்து உக்ரைன் விமானப்படை வட்டாரங்கள் கூறியதாவது: ரஷ்யாவின் காலிபர், இஸ்காந்தர், பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகள் மூலம் ஒடெசா நகரம் மீது கடந்த 20-ம் தேதி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் காலிபர், இஸ்காந்தர் ரக ஏவுகணைகளை வெற்றிகரமாக சுட்டு வீழ்த்திவிட்டோம். ஆனால் பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகளில் ஒரு ஏவுகணையைக்கூட சுட்டு வீழ்த்த முடியவில்லை. இந்த ஏவுகணைகள் மணிக்கு 3,000 கி.மீ. வேகத்தில் சீறிப் பாய்கின்றன. இலக்கை தாக்கும் போது தரை அல்லது கடல் மட்டத்தில் இருந்து 10 முதல் 15 மீட்டர் உயரத்தில் பறக்கிறது.




அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் அதிநவீன பாதுகாப்பு தடுப்பு சாதனங்கள் எங்களிடம் உள்ளன. ரஷ்ய ஏவுகணைகள் உக்ரைன் எல்லைக்குள் நுழைந்தால் எங்களது தடுப்பு ஏவுகணைகள் தானாகவே சீறிப் பாய்ந்து நடுவானில் எதிரி ஏவுகணைகளை அழித்துவிடும். ஆனால் பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு வளையங்களை தாண்டிப் பாய்கிறது. இந்த ஏவுகணைகளை சுட்டு வீழ்த்துவது கடினம். இவ்வாறு உக்ரைன் விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரஷ்ய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறும்போது, ''ரஷ்ய ராணுவத்திடம் மொத்தம் 470 பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ரக ஏவுகணைகள் இருந்தன. உக்ரைன் போரில் இதுவரை 123 ஏவுகணைகளை பயன்படுத்தி விட்டோம். அதாவது, மொத்த ஏவுகணைகளில் 25 சதவீதத்தை இழந்திருக்கிறோம். இப்போதைய சூழலில் மிக முக்கிய தாக்குதல்களுக்கு மட்டுமே பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகளை பயன்படுத்தி வருகிறோம்'' என்று தெரிவித்தன.

இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது: ரஷ்யாவின் பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகளைவிட இந்தியாவில் தயாரிக்கப்படும் பிரம்மோஸ் ஏவுகணைகள் அதிகதிறன் கொண்டவை. தற்போதைய பிரம்மோஸ் ஏவுகணைகள் 450 கி.மீ. தொலைவு வரை சீறிப் பாயும் திறன் கொண்டவை.

இந்தியாவிடம் இருந்து பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணைகளை வாங்க பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, இந்தோனேசியா, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. இதில் பிலிப்பைன்ஸ் அரசு ஏற்கெனவே ரூ.3,103 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணைகளைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக 1,500 கி.மீ. தொலைவு பாயும் பிரம்மோஸ் ஹைப்பர்சானிக் ஏவுகணைகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளோம். இது தொடர்பான ஆராய்ச்சி நடைபெறுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் பிரம்மோஸ் ஹைப்பர்சானிக் ஏவுகணையின் உற்பத்தி தொடங்கப்படும். இந்த ஏவுகணை மணிக்கு 9,000 கி.மீ. வேகத்தில் சீறிப் பாயும். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இவ்வாறு இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### ஆம் ஆத்மி ராஜ்யசபா உறுப்பினர் சஞ்சய் சிங் இடைநீக்கம்

# ஜனநாயக விரோத மற்றும் சர்வாதிகார நடவடிக்கையாகும் –எஸ்.டி.பி.ஐ. கட்சி கண்டனம்

சென்னை, ஜூலை. 26–

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் ராஜ்யசபாவின் மீதமுள்ள அமர்வில் கலந்துகொள்ள ஆம் ஆத்மி எம்.பி., சஞ்சய் சிங் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பது ஜனநாயகவிரோதமானது மற்றும் சர்வாதிகாரமானது என எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தேசிய தலைவர் எம்.கே.ஃபைஸி கண்டனம் தெரிவித்ததுள்ளார்.

ராஜ்யசபாவில் மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி அறிக்கை வெளியிட வேண்டும் என்று சஞ்சய் சிங் மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து கோரிக்கை விடுத்தார். ஆனால் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படாததால், கேள்வி நேரம் தொடங்கியதும், சஞ்சய் சிங் தனது கோரிக்கையை வலியுறுத்துவதற்காக சபையின் மையப்பகுதிக்கு சென்றதற்காக அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விவாதித்து தீர்வு காணும் மேடையாக நாடாளுமன்றம் உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த உரிமையை மறுப்பது நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து பின்பற்றி வரும் ஜனநாயக கொள்கைகளுக்கு எதிரானது. 2002ல் குஜராத் இன அழிப்புக்குப் பிறகு, மணிப்பூரில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான இனக்கலவரத்தை கண்டும் காணாமல் இருந்துவரும் ஆளும்கட்சி, 2002ல் நடந்த குஜராத் இனச் சுத்திகரிப்புக்குப் பிறகு, நாட்டின் நற்பெயருக்குக் களங்கமாக மாறியது. இந்நிலையில் மணிப்பூர் வன்முறைக்கும் ஆளும் அரசின் செயல்படாத்தன்மையை வெளிப்படுத்தும் என்பதால், அதைப் பற்றி விவாதிக்க பாஜக அரசு விரும்பவில்லை.

சஞ்சய் சிங்கின் இடைநீக்கத்தை நிபந்தனையின்றி ரத்து செய்து, நாட்டில் கொழுந்துவிட்டெரியும் பிரச்னைகள் குறித்து விவாதம் நடத்தும் சூழ்நிலையை நாடாளுமன்றத்தில் உருவாக்க வேண்டும். அதற்கு ஆளும் கட்சி தனது கொடுங்கோன்மையான போக்கை கைவிட்டால் மட்டுமே அது சாத்தியமாகும் என்றார் பைஸி.

# மணப்பாறையில் மணிப்பூர் ஒருமைப்பாட்டு நாளாக வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

மணப்பாறை, ஜூன்.26–



மணப்பாறை கோவில்பட்டி சலையில் உள்ள காமராஜ் சிலை அருகே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகரகுழு சார்பில் மணிப்பூரில் பழங்குடி பெண்கள் மீது அரங்கேறும் பாலியல் வன்கொடுமையை வேடிக்கை பார்க்கும் மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும் மணிப்பூரின் உண்மை நிலை கண்டு அறிய சென்ற தேசிய நிவாகக்குழு உறுப்பினர் ஆனிராஜா உள்ளிட்ட தோழர்கள் மீதான பொய் வழக்கை திரும்பப்பெற கோரியும் மணிப்பூர் ஒருமைப்பாட்டு நாளாக வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சி.பி.ஐ. நகர நிர்வாககுழு உறுப்பினர் சுப்ரமணியன் தலைமை வகித்தார் நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார் புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி ஏஐடியுசி போக்குவரத்து கழக மாவட்ட துணைத் தலைவர் சுந்தர்ராஜ் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டத் தலைவர் ராஜேப்திரன் ஆகியோர் உரை நிகழ்தினர், சி.பி.ஐ நகர ஒன்றிய நிர்வாகிகள் ஏஐடியுசி போக்குவரத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்ட முழக்கமிட்டனர் அனைவருக்கும் மாசிமலை நன்றி கூறினார்



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் கடை வீதியில் மணிப்பூரில் கடந்த 90 நாட்களுக்கு மேலாக நடந்து வரும் கொடூரமான இனக் கலவரத்தை பெண்கள் பாலியல் பலாத்காரத்தை தடுக்க தவறிய மத்திய பிஜேபி அரசை கண்டித்து மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் திருக்கட்டளை ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயபால் தலைமையில் திருமயம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப்ராம் முன்னிலையில் திருவரங்குளம் வட்டார காங்கிரஸ் தலைவர்கள் ஐயப்பன் பன்னீர்செல்வம் தன்ராஜ் பூங்குன்றன் சத்யராஜ் நகரத் தலைவர்கள் அரங்குலவன் சரவணன் பொதுக்குழு உறுப்பினர் மணிகண்டன் திருக்கட்டளை ஒன்றிய கவுன்சிலர் கண்ணன் மகளிர் அணி மகிலா காங்கிரஸ் நிர்வாகி சிவந்தி மற்றும் மாவட்ட நகர ஒன்றிய கிளைக் கழக காங்கிரஸ் நிர்வாகிகள் மகளிர் அணியினர் காங்கிரஸ் உறுப்பினர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி மோடி அரசை பதவி விலகக் கூறி ஆர்ப்பாட்டம் செய்தனர்.



காரைக்காலில் உள்ள பிரபல நகைக்கடையில் தங்க மோதிரத்தை திருடிச்சென்ற பெண் ஒருவரை காரைக்கால் நகர காவல் நிலைய போலீசார் சிசிடிவி காட்சிகளை வைத்து கைது செய்தனர். காரைக்கால் மாவட்டத்தில் உள்ள மாதா கோவில் வீதியில் ஒரு பிரபல நகைக்கடை உள்ளது. அங்கு மாதம் இருமுறை கடையில் உள்ள நகைகளை சரி பார்ப்பது வழக்கம். அந்தவகையில் நகைகளை சரி பார்த்தனர். அப்போது, அரை பவுன் தங்க மோதிரம் குறைவது தெரியவந்தது. பின்னர் சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்துள்ளனர். அப்போது கடந்த 14ந் தேதி கடையில் 45 வயது மதிக்கத்தக்க ஒரு ஆணும், ஒரு பெண்ணும் நகை வாங்குவது போல் வந்து அரை பவுன் தங்க மோதிரத்தை வெகுநேரம் பார்த்துள்ளனர். பிறகு அந்த மோதிரத்தை இருவரும் கர்ச்சீப் ஒன்றில் மறைத்து, பிறகு வருகிறோம் என கூறி நகைகள் எதுவும் வாங்காமல் செல்வது தெரியவந்தது. தொடர்ந்து கடை உரிமையாளர் காரைக்கால் நகர போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து நகைகளை திருடிச்சென்ற மர்ம நபர்களை சிசிடிவி காட்சிகளை வைத்து தேடிவந்தனர். இந்த நிலையில் மோதிரத்தை திருட்டிசென்ற பெண் ஏற்கெனவே தமிழகப்பகுதியில் இது போல் கடைகளில் நகை வாங்குவது போல் நகை திருடிய வழக்கில் கைது செய்யப்பட்டிருப்பது என்று தெரியவந்தது. அதன்பேரில் திருவாரூர் ஐயம்பேட்டையை சேர்ந்த தலலட்சுமியை (45) நகர போலீசார் கைது செய்து, மோதிரத்தை மீட்டனர்.

### ஆடித் திருவிழா நடத்த இடையூறாக உள்ள

# ஊராட்சி மன்றத் தலைவரின் கணவரை கண்டித்து கிராம மக்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம்



ஊத்துக்கோட்டை, ஜூலை 26–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கொமக்கம்பேடு ஊராட்சியில் பழைமை வாய்ந்த மாரியம்மன் திருக்கோவில் ஒன்று உள்ளது. இந்நிலையில், இந்த கோவிலை மணி குடும்பத்தினர் பல ஆண்டு காலமாக பராமரித்து வருகின்றனர்.

மேலும், இக்கோவிலில் நடைபெறும் பூஜைகளில் மணி குடும்பத்தினருக்கு முதல் மரியாதையும் கிராம மக்கள் வழங்கி வருகின்றனர். இந்நிலையில், கடந்த 22-ம் தேதி இக்கோவிலில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற்றது. அப்பொழுது அங்கு வந்த ஊராட்சிமன்ற தலைவர் வெங்கடேஸ்வரியின் கணவரும், திமுக பிரமுகருமான தங்கராஜ் இந்த ஊராட்சிமன்றத்தின் தலைவராகஎனதுமனைவி பதவி வகித்து வருகிறார். மேலும், தமிழகத்தில் திமுகவைச்சேர்ந்தஎங்களது கட்சி ஆட்சி செய்து வருகிறது. எனவே, எனது குடும்பத்தின் சார்பில் தான் முதல் பூஜையும், எனக்குத்தான் முதல் மரியாதையும் கொடுக்க வேண்டும் இல்லை என்றால் திருவிழாவை நிறுத்த வேண்டும் என்று கூறிகலாட்டாசெய்தாராம்.

இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அங்கிருந்த பக்தர்களும், பொதுமக்களும் தங்கராஜிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். எனவே, மணி குடும்பத்தினர் திருவிழா அமைதியாக நடைபெற வேண்டும் என்றும் எனவே அனைவரும் அமைதியாக இருங்கள் தற்போது ஆடிப்பூரத் திருவிழா பிரச்சனை இன்றி சுமூகமாக நடக்கட்டும் என்று ஊர்பொதுமக்களிடமும், அங்கிருந்தபக்தர்களிடமும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன் அடிப்படையில் தங்கராஜ் குடும்பத்தினர் முதல் பூஜை செய்து மரியாதையைப் பெற்றுக்கொண்டனர். இந்நிலையில், ஆடி மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை (06.08.2023) அன்று இக்கோவிலில் ஆண்டு தோறும் கூழ் ஊற்றும் நிகழ்ச்சிவெகுவிமர்சையாக நடைபெறும். இந்நிலையில், இதற்கான ஏற்பாடுகளை நேற்று முன்தினம் கிராம மக்களும், மணி குடும்பத்தினரும் செய்து வந்தனர். அப்பொழுது அங்கு வந்த தங்கராஜ் கூழ் ஊற்றும் நிகழ்ச்சியில் எனக்கு தான் முதல் மரியாதை வழங்க வேண்டும். இனிமேல் கோவில் நிர்வாகத்தை ஊராட்சிமன்றதலைவரின் கணவர் என்ற முறையில் என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறினாராம். இதனால் அதிர்ச்சி அடைந்த கிராம மக்களும், பக்தர்களும் உடனடியாக ஊர் கூட்டம் நடத்தினர். இக்கூட்டத்திற்கு வருமாறு தங்கராஜ்க்கு மணி குடும்பத்தினரும், கிராம மக்களும் அழைப்பு விடுத்தனர். ஆனால், அவர் ஊர் கூட்டத்தில் பங்கேற்க மாட்டேன் என்று கூறி புறக்கணித்து விட்டார்.

இந்நிலையில், கூழ் ஊற்றும் நிகழ்ச்சியை எனது அறிவுரையின் படி நடத்த வேண்டும். இல்லை என்றால் பிரச்சனை நடைபெறும் என்று தங்கராஜ் கூறினாராம். இதனால் நேற்று மதியம் கிராம மக்கள் மணியின் குடும்பத்திற்கு ஆதரவு தெரிவித்தும், கூழ் ஊற்றும் நிகழ்ச்சி பிரச்சனை இன்றி நடைபெறவும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கூறி வெங்கல் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், கூழ் ஊற்றும் திருவிழா நிகழ்ச்சிக்கு போதிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்எனகிராமமக்கள் மனு ஒன்றையும் காவல் நிலையத்தில் அளித்தனர். எனவே, போலீசார் சம்பந்தப்பட்ட ஊராட்சிமன்றதலைவரின் கணவரை அழைத்து பேசுவதாகவும், உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறினர். இதனை அடுத்து கிராம மக்கள் அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர். இப்பிரச்சினையால் சுமார் ஒரு மணி நேரம் காவல் நிலையத்தில் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.



# அமைச்சர் உதயநிதியால் விளையாட்டுத்துறை புத்துணர்ச்சி பெற்றுள்ளது

# அறந்தாங்கியில் விபச்சாரம்: 5 பேர் கைது எஸ்பி தனி படை அதிரடி





# மணிப்பூர் கொடூரம்: 4-வது நாளாக முடங்கியது நாடாளுமன்றம்

சென்னை / புதுக்கோட்டை | 26.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

முூ. இராகவையங்கார் , தமிழகத் தமிழறிஞர் (பி.1878) (இ.1960)



மு. கு. ஜகந்நாதராஜா , பன்மொழிப் புலவர் (பி.1933) (இ.2008)



வாஸந்தி , தமிழக எழுத்தாளர் (பி.1941)



## இன்றைய நினைவு நாள்

க. சொர்ணலிங்கம் , கலையரசு, ஈழத்தின் நாடகக் கலைஞர் (பி.1889) (இ.1982)



யூ. ஆர். ஜீவரத்தினம் , தமிழ்த் திரைப்பட நடிகை, பாடகி (பி.1927) (இ.2000)



ஜெயந்தி , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1945) (இ.2021)



## கார்கில் போர் வெற்றி நாள் (இந்தியா)